

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நார்வே மற்றும் ஆர்மேனியா நாடுகளில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டிகளில் முன்னணி இடங்களை வென்ற தமிழ்நாடு செஸ் வீரர்கள் டி.குகேஷ், அரவிந்த் சிதம்பரம், ர.பிரக்ஞானந்தா ஆகியோருக்கு நேற்று (12.6.2025) வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் அவர்களின் மகன் வி.கிருஷ்ணகுமார் – லோ.கோ.சரண்யா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்!

# எழும்பூர் ஜெ.விஜயகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### ஆ.ராசா-ஆர்.எஸ்.பாரதி-பி.கே.சேகர்பாபு-தயாநிதி மாறன்-டி.கே.எஸ்.இளங்கோவன்-இ.பரந்தாமன் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 13 -

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் மகன் வி.கிருஷ்ண குமார்லோ.கோ.சரண்யா இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இவ்வரவேற்பு விழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமை தாங்கினார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் முன்னிலை வகித்தார்.

நீலகிரி மக்களவைத் தொகுதி உறுப்பினரும் கழகத் துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆல்.எஸ்.பாரதி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக விளையாட்டு அணி மேம்பாட்டு அணி செயலாளருமான தயாநிதி மாறன், கழக வெளியீட்டுக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., வடசென்னை மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.ரங்கநாதன், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், அண்ணா நகர் தெற்கு பகுதிச் செயலாளர் ந.இராமசிங்கம், எழும்பூர் பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ந.துலுக்காணம், எழும்பூர் வட்டக் கழகச் செயலாளர்கள் வீ.விஜயகுமார், டி.தயாளன், ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன், டால்பின் அரி, கொளத்தூர் பகுதி கழகச் செயலாளர் ஐ.சி.எஃப்.முரளி, அண்ணா நகர் பகுதி கழகச் செயலாளர் ச.பரமசிவம், திரு.வி.க. நகர் பகுதி கழகச் செயலாளர் தமிழ்வேந்தன்,

மாநிலப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வெ.உமா காந்தன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சே.பாலாஜி, முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருசோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார்,

முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி கள் மு.கமலக்கண்ணன், மா.காந்தி; வட்டத் துணை செயலாளர் கே.சீனி வாசன், ந.இளஞ்செழியன், முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜய போஸ், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றி வேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன்; 108 இளைஞர் அணி வட்ட அமைப்பாளர் பு.சதிஷ்குமார், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், எம்.இ.தேவ நிதி, நேரு பிரபாகரன், விஜய தேவராஜ், வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், பாக முகவர் கவிதா, ஜெ.சரவணன் உள்ளிட்டு தலைமை, மாவட்ட மற்றும் பகுதி கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.


